மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு வரிவிதிப்புச் சட்டங்கள் (குறித்த சில வகைமுறைகளின் தளர்வு) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புச் சட்டங்கள் (குறித்த சில வகைமுறைகளின் தளர்வு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2020), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புச் சட்டங்கள் (குறித்த சில வகைமுறைகளின் தளர்வு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

@ 15-9-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2020 செப்டம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் சட்டமுன்வடிவும் இந்தச் சட்டமுன்வடிவிற்குத் தொடர்புடையது என்பதால், பேசவிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு சட்டமுன்வடிவுகள் குறித்தும் ஒருசேர கருத்து தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் 112–வது பிறந்த நாளிலே அவர்களுக்கு என்னுடைய புகழாரத்தைத் தெரிவித்துக்கொண்டு, 'ஒன்றிணைவோம் வா' திட்டத்தின்மூலம் கொரோனா ஊரடங்கு காலத்தில் பொது மக்களுக்குப் பாதுகாவலராக இருந்து பொது மக்களைப் பாதுகாத்த எங்களுடைய கழகத் தலைவரை வணங்கி, எங்களுடைய இளைஞரணி செயலாளரை வணங்குகிறேன்.

பிற்பகல் 2–30

Last time இந்த Bill தொடர்பான amendment வந்தபோது, நிறைய rectification சொல்லியிருந்தேன். அப்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Council–ல் வைத்துப் பேசி செய்வதாகச் சொன்னார்கள். இப்போதும் அதே Bill வந்திருக்கிறது. Under Section 30, Revocation of Cancellation of Registration— அதில் பார்த்தீர்களென்றால், நான்கு, ஐந்து மாதங்களுக்கு file செய்யவில்லை என்றால், Additional Commissioner–க்கு 30 days time அவர்களே கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். மார்ச் மாதம் வரையிலும் யாரையும் disturb செய்யாமல் இருந்தால் நன்றாக இருக்கும். மேலும், Section 122–Penalty for certain offences. ஒரு சிலர் போலியான purchase bill–ஐ வாங்கினால் penalty போடலாம் என்பதுபோன்று கொண்டு வந்திருக்கிறீர்கள். நான், அதற்குள் போக விரும்பவில்லை. Tax செலுத்தாததற்கு, ஜூன் மாதம் வரையும் 9% interest–ஐ penality ஆகப் போட்டிருக்கிறீர்கள். அதை ஜூலையிலிருந்து 18% ஆக உயர்த்தியிருக்கிறீர்கள். மேலும், மே மாதத்திலிருந்து ஒரு நாளைக்கு 200 ரூபாய் என late fee போட்டிருக்கிறீர்கள். இவையெல்லாம் இந்த Bill–ல் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதற்கும், மார்ச் மாதம் வரையிலும் extension கொடுத்திருக்க வேண்டும்.

மூன்றாவதாக, Annual Return. GSTR–9 and 9C–க்கு செப்டம்பர் மாதம் கடைசி தேதி என்று கொடுத்திருக்கிறீர்கள். அதற்கும், மார்ச் மாதம் வரையிலும் extension கொடுத்து,

[திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்] [*2020 செப்டம்பர் 15*

அதுவும் இந்த Bill–ல் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்த மூன்றையும் ஏன் சொல்கிறேன் என்றால், இதே Bill–ல் Section 168–Power to issue instructions or directions மற்றும் Section 86–ல் Power to amend Schedules, இந்த இரண்டிலும் என்ன சொல்லியிருக்கிறீர்களென்றால், Force Majeure clause–ன் மூலமாக pandemic period–ல், flood, drought, fire, cyclone, earthquake போன்ற சமயங்களில் அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும் என்பது போன்று இந்த Council–ல் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இதனடிப்படையில் நான் சொன்ன மூன்று விஷயங்களையுமே, நீங்கள் மறு பரிசீலனை செய்து Registration–ல் 5 மாதங்களாக file செய்யவில்லை என்றால் அதனை cancel செய்யாமல், அவர்களுக்கு மார்ச் வரைக்கும் extension கொடுக்க வேண்டும்.

Tax செலுத்தாதவர்களுக்கு நீங்கள் interest என்பது இல்லாமல் செய்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், இன்றைக்கு வியாபாரமே இல்லை. ஐந்து மாதங்களாக அரசு lockdown அறிவித்திருக்கிறது. இந்தச் சமயத்தில் tax கட்டுவதற்கே interest போட்டால் பொது மக்களை மிகவும் சிரமப்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்படும். Late fee–ஐ பொறுத்தவரையில் ஒரு நாளைக்கு 200 ரூபாய் போடப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த Bill–ல் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதேபோன்று, Annual Return–ஐ இந்த மாதம் செப்டம்பரில் file செய்வதற்கு வாய்ப்பே கிடையாது. ஏனென்றால், பல வசதி வாய்ப்புகள் அரசாங்கத்திற்கு இருந்தும், நம்முடைய சட்டமன்றம்கூட இந்த மாதிரி பாதுகாப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு சாதாரண வியாபாரி ஐந்து மாதங்களாக file செய்யாத எல்லா Returns–ஐயும் செப்டம்பரில் file செய்ய வேண்டுமென்பது நடைமுறைக்கு சாத்தியமில்லாத விஷயம். எனவே, அரசாங்கம் Bill–ஐ rectify செய்து கொண்டுவர வேண்டும்.

மேலும், Paragraph 16–ல் Amendment 2. Second Amendment–ல் GSTR–2–ல் அக்டோபரில் amendment செய்யப்போகிறீர்கள். என்ன amendment செய்யப்போகிறீர்கள் என்றால், இதுவரைக்கும் ஒரு buyer ஒரு பொருள் வாங்கினார் என்றால் அவர் tax கட்டிவிட்டார்; செப்டம்பர் மாதம் வாங்குகின்ற பொருளுக்கு அக்டோபர் மாதத்தில் tax கட்டப்பட்டுவிட்டது என்றால் அந்த seller–யிடம் valid GST I.D. இருந்தால், அவர்கள் input tax எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இந்த GSTR–2 மூலமாக என்ன செய்யப்போகிறார்களென்றால், buyer tax கட்டிவிட்டார் என்றால், அந்த seller–ம் tax–ஐ கட்டினால் மட்டும்தான் அவரால் திரும்ப input

tax–ஐ எடுக்க முடியும். அப்படிக் கட்டவில்லை என்றால், அந்தப் பணம் seller–க்குத்தான் சென்று சேரும். இந்தியாவில் already GDP minus 24.5–ல் போய்க் கொண்டிருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலை நீடித்தால், இருக்கின்ற M.S.M.E.s மொத்தமும் அழிந்து போய்விடும். எனவே, இதையெல்லாம் அரசாங்கம் கருத்தில்கொண்டு இந்தச் சட்டத் திருத்தத்தை எல்லாம் மாற்றி மறுபடியும் ஒரு Bill–ஐ pass செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தற்போது, கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத் திருத்தமானது காலவரம்பு நீட்டித்தல் சம்பந்தமாகவும், பல்வேறு நடைமுறை மாற்றங்களை மேற்கொள்வதற்காகவும் நிறைவேற்றப்படவிருக்கின்றது. ஆகவே, தாங்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய அத்துணை கருத்துகளையும் மீண்டும் ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல் ஏதாவது மாற்றுவதற்கு எங்களுடைய Council–க்கு நாங்கள் பரிந்துரை செய்யக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், அதைப் பரிந்துரை செய்து, அதற்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

@ 15-9-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புச் சட்டங்கள் (குறித்த சில வகைமுறைகளின் தளர்வு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)